## முக்கிய தொழில்துறை மாநிலமான தமிழ்நாட்டில்

# பிரதமரின் வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டம் செயல்படும் நிலை என்ன?

## மக்களவையில் கனிமொழி கருணாநிதி எம்.பி. கேள்வி!

சென்னை. ஆக.23-

பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் தொடர்பாக தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், தி.மு.க. நாடாளுமன்றக் குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி எம்பி. மக்களவையில் எழுத்துபூர்வ கேள்விகளை எழுப்பினார்.

"பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (PMEGP) தொடங்கப்பட்டதிலிருந்து, மாநில வாரியாக, குறிப்பாக தமிழ்நாடு மாநிலத்திற்கு... அனுமதிக்கப்பட்ட, விடுவிக்கப்பட்ட மற்றும் பயன்படுத்தப்பட்ட நிதியின் விவரங்கள் என்ன?

முக்கிய தொழில்துறை மாநிலமான தமிழ்நாட்டில் பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின் (PMEGP) செயல்திறனை ஒன்றிய அரசு மதிப்பீடு செய்துள்ளதா? அப்படியானால், அதன் விவரங்கள் என்ன?

இந்தத் திட்டத்தின் மூலம் தமிழ்நாட்டில் நிறுவப்பட்ட குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் (MSMEs) எண்ணிக்கை மற்றும் உருவாக்கப்பட்ட வேலைவாய்ப்பு பற்றிய விவரங்கள் என்ன?

குறிப்பாக தூத்துக்குடி மாவட்டத்தில் MSMEகளை மேம்படுத்த சிறப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதா? எடுக்கப்பட்டிருந்தால் அதுகுறித்த விவரங்கள் என்ன?

நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லையெனில் அதற்கான காரணங்கள் யாவை?" என்று கனிமொழி கருணாநிதி எம்.பி. கேள்விகள் கேட்டிருந்தார்.

இந்த கேள்விகளுக்கு ஒன்றிய அரசின் சிறு. குறு. நடுத்தர தொழில் துறை இணையமைச்சர் சுஷ்ரி ஷோபா கரண்ட்லஜே எழுத்துபூர்வமாக பதிலளித்தார். அதில்,

"பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (PMEGP) ஒன்றிய அரசின் திட்டமாக இருப்பதால், மாநில வாரியாக பட்ஜெட் ஒதுக்கீடு செய்யப்படுவதில்லை.

தேவை மற்றும் நிதி நிறுவனங்களால் அனுமதிக்கப்பட்ட



கடன்களின் அடிப்படையில் இந்தத் திட்டத்துக்கான நிதி பயன்படுத்தப்படுகிறது.

PMEGP திட்டம் தொடங்கப்பட்ட 2008-09 நிதியாண்டு முதல் தற்போதைய நிதியாண்டில் (2025-26) 18.08.2025 தேதிவரைமாநிலங்கள், மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு மொத்தம் 28 ஆயிரத்து 95 கோடியே 76 லட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. இதில் தமிழ்நாட்டுக்கு 1754.14 கோடி ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது.

இதே கால கட்டத்தில் உத்திரப்பிரதேச மாநிலத்துக்கு 3791 கோடி ரூபாய், குஜராத்துக்கு 2378 கோடி ரூபாய், ஜம்மு காஷ்மீருக்கு 2075 கோடி ரூபாய் என வழங்கப்பட்டுள்ளன.

PMEGP திட்டத்தின் செயல்திறன் குறித்த மதிப்பீட்டு ஆய்வு எதுவும் தமிழ்நாட்டில் மேற்கொள்ளப்படவில்லை.

2008-09 நிதியாண்டில் இந்தத் திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து நடப்பு 2025-26 நிதியாண்டில் 18.08.2025 வரை தமிழ்நாட்டில் 68.639 நுண்தொழில் நிறுவனங்களுக்கு நிதியுதவி செய்யப்பட்டிருக்கிறது. இதன் மூலம் தமிழ்நாட்டில் உத்தேசமாக 6 லட்சத்து 40 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்புகிடைத்துள்ளது.

தூத்துக்குடி மாவட்டம் உட்பட நாட்டில் MSMEகளை ஊக்குவிப்பதற்காக அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

இவற்றில் பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (PMEGP) மட்டுமல்லாமல் குறு மற்றும் சிறு நிறுவனங்களுக்கான கடன் உத்தரவாத நிதி அறக்கட்டளை, தொழில்முனைவோர் மற்றும் திறன் மேம்பாட்டுத் திட்டம், குறு மற்றும் சிறு நிறுவனங்கள் கிளஸ்டர் மேம்பாட்டுத் திட்டம், MSME செயல்திறனை உயர்த்துதல் மற்றும் துரிதப்படுத்துதல் திட்டம், MSME சாம்பியன்ஸ் திட்டம் ஆகியவை செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இவை ஒவ்வொன்றைப் பற்றியும் பார்க்கலாம்.

**1. பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம்:**

புதிய நுண் நிறுவனங்களை அமைப்பதில் தொழில்முனைவோருக்கு உதவுவதற்கான ஒன்றிய அரசுத் திட்டம் இதுவாகும்.

PMEGP இன் கீழ், பொதுப் பிரிவு பயனாளிகளுக்கு கிராமப்புறங்களில் திட்டச் செலவில் 25% மற்றும் நகர்ப்புறங்களில் 15% மானியம்வழங்கப்படுகிறது.

பட்டியல் வகுப்பினர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையினர், பெண்கள், முன்னாள் ராணுவத்தினர், மாற்றுத் திறனாளிகள், திருநங்கைகள், வடகிழக்கு பிராந்தியம், மலை, எல்லைப் பகுதிகள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட சில மாவட்டங்கள் போன்ற சிறப்புப் பிரிவுகளைச் சேர்ந்த பயனாளிகளுக்கு கிராமப்புறங்களில்35% மற்றும் நகர்ப்புறங்களில் 25% என்ற அளவில் மானியம் வழங்கப்படுகிறது.

**2. குறு மற்றும் சிறு நிறுவனங்களுக்கான கடன் உத்தரவாதத் திட்டம்:**

இந்திய குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் மற்றும் சிறு தொழில்கள் மேம்பாட்டு வங்கி (SIDBI), தனது உறுப்புக் கடன் நிறுவனங்கள் (MLIs) மூலம் நுண் மற்றும் சிறு நிறுவனங்களுக்கு (MSEs) பிணை பாதுகாப்பு மற்றும் மூன்றாம் தரப்பு உத்தரவாதம் இல்லாமல் வழங்கப்படும் கடன்களுக்கு... கடன் உத்தரவாதத்தை வழங்குவதற்காக, குறு மற்றும் சிறு நிறுவனங்களுக்கான கடன் உத்தரவாத அறக்கட்டளை நிதி (CGTMSE) நிறுவப்பட்டிருக்கிறது.

**3. தொழில்முனைவோர் மற்றும் திறன் மேம்பாட்டுத் திட்டம் (ESDP) திட்டம்:**

பட்டியல் சமுதாயத்தினர், பெண்கள், மாற்றுத்திறநாளிகள், முன்னாள் ராணுவ வீரர்கள், மற்றும் வறுமைக் கோட்டுக்குக் கீழே இருக்கும் இளைஞர்களை சுயதொழில் அல்லது கூட்டுத்தொழில் செய்ய ஊக்குவிக்கும் நோக்கத்துடன் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

புதிய நிறுவனங்களை ஊக்குவித்தல், ஏற்கனவே உள்ள MSMEகளின் திறனை மேம்படுத்துதல் மற்றும் நாட்டில் தொழில்முனைவோர் கலாச்சாரத்தை வளர்ப்பது இதன் இறுதி நோக்கமாகும்.

**4. MSME செயல் திறனை உயர்த்துதல் மற்றும் துரிதப்படுத்துதல் (RAMP) திட்டம்:**

உலக வங்கியின் ஆதரவோடு செயல்படுத்தப்படும் ஒன்றிய அரசின் திட்டம் இது.


இத்திட்டத்தின் வழியாக புதுமை, டிஜிட்டல் மயமாக்கல், சந்தை அணுகல், கடன் போன்ற அம்சங்களில் MSME செயல்திறனை ஊக்குவித்து மேம்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ், MSME துறையின் வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்காக அனைத்துமாநிலங்கள், யூனியன் பிரதேசங்களுக்கும் தலா ரூ. 5 கோடி மானியம் வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

5. MSME சாம்பியன்ஸ் திட்டம்:

MSME சாம்பியன்ஸ் திட்டம் என்பது நிலையான (ZED) சான்றிதழ் திட்டம், MSME போட்டி திட்டம் மற்றும் MSME புதுமையான வடிவமைப்பு மற்றும் டிஜிட்டல் திட்டம் ஆகியவற்றை ஒருங்கிணைத்து செயல்படுத்தும் ஒரு முழுமையான அணுகுமுறையாகும்.

இவ்வாறு நாட்டில் MSMEகளை ஊக்குவிப்பதற்காக அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது" என்று அந்த பதிலில் ஒன்றிய அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.



தமிழ்நாடு சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி. சுப்ரியா சாகு ஐ.ஏ.எஸ். அவர்களை சந்தித்து, ஈரோடு மற்றும் நாமக்கல் பகுதிகளில் Pollution குறித்தும் மேலும், Common Effluent Treatment Plant (CETP) தொடர்பான தேவைகள் மற்றும் பரிந்துரைகள் குறித்தும் விரிவான கடிதத்தையும் ஈரோடு கே.இ.பிரகாஷ் எம்.பி. வழங்கினார்.

## உயர்மட்ட சாலை மேம்பால

# கட்டுமானத்தில் அதிநவீன தொழில்நுட்பம்!

## பொதுப்பணித்துறை வீடியோ வெளியிட்டு விளக்கம்!

சென்னை, ஆக. 23 -

சென்னை தேனாம்பேட்டை - சைதாப்பேட்டை இடையிலான உயர்மட்ட சாலை மேம்பால கட்டுமானத்தில் பயன்படுத்தப்படும் அதிநவீன தொழில்நுட்பம் குறித்து பொதுப்பணித் துறை மற்றும் நெடுஞ்சாலைத் துறை அனிமேஷன் வீடியோ வெளியிட்டு விளக்கம் அளித்துள்ளது.

சென்னை தேனாம்பேட்டை - சைதாப்பேட்டை இடையிலான உயர்மட்ட பாலம் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்த மேம்பாலத்திற்கு கீழே மெட்ரோ ரயில் சேவை நடைபெற்று வருகிறது. இந்திய அளவில், நிலப் பரப்பிற்கு கீழே இயக்கத்தில் உள்ள ஒரு மெட்ரோ ரயில் சுரங்கப்பாதைக்கு (Under Ground Metro Tunnel) மேலே கட்டப்படும் முதல் சாலை மேம்பாலம் இதுவாகும்.

இந்நிலையில், இந்த மேம்பாலத்தை வடிவமைப்பது பெரும் சவாலாகவே இருந்ததாக நெடுஞ்சாலைத்துறை தெரிவித்துள்ளது. இந்த பாலத்திலிருந்து வரும் அழுத்தம், மெட்ரோ ரயில் சுரங்கப்பாதைகளை சிறிதளவும் பாதிக்காத வண்ணம் வடிவமைக்க வேண்டி இருந்ததாகவும் தெரிவித்துள்ளது. மேம்பாலதிற்கு அடித்தளம் அமைக்க ஆழமான பள்ளங்களை மற்றும் நீண்ட துளைகளை (piling technique) எடுக்க முடியாத சூழல் இருந்ததாகவும் நெடுஞ்சாலைத்துறை தெரிவித்துள்ளது.

இதையடுத்து, சென்னை மெட்ரோ ரயில் நிறுவன வல்லுநர்கள், ஐஐடி மெட்ராஸ் வல்லுநர்கள் மற்றும் இங்கிலாந்து, ஜெர்மன் நாட்டு தொழில் நுட்ப நிபுணர்கள் ஆகியோருடன் கலந்தாலோசித்து இந்த உயர்மட்ட சாலை வடிவமைக்கப்பட்டதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

பல்வேறு முயற்சிகளுக்குப் பிறகு பாலத்தின் அழுத்தத்தை குறைக்கும் வகையில் இரும்பினால் ஆன முன்வார்க்கப்பட்ட (pre fabricated) கட்டமைப்பு உபகரணங்களைக் கொண்டும், மண்ணின் தாங்கு திறனை நவீன தொழில்நுட்பத்தை கொண்டு மேம்படுத்தி, அடித்தளம் அமைக்கும் வகையிலும், வடிவமைக்கப்பட்டு கட்டுமான பணிகளை மேற்கொள்ள இறுதி செய்யப்பட்டதாக நெடுஞ்சாலைத் துறை கூறியுள்ளது.





முதலமைச்சர் – கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க, மதுரவாயல் சட்டமன்றத் தொகுதி, வார்டு–146, மதுரவாயல், சீதாலட்சுமி திருமண மண்டபத்தில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் முகாம் நிகழ்ச்சியில் மதுரவாயல் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி கலந்து கொண்டு கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் உள்ளிட்ட பொது மக்களின் பல்வேறு கோரிக்கைகளுக்கு தீர்வு காணும் வகையில் சம்மந்தப்பட்ட துறையினரிடம் உரிய முறையில் பரிசீலனை செய்து சேவைகளை பயனாளிகளுக்கு வழங்கினார். இந்நிகழ்வில் மண்டலக் குழுத் தலைவர் நொளம்பூர் வே.ராஜன், பகுதி கழக நிர்வாகிகள் ஆர்.கர்ணல், தீ.பாலாஜி, எம்.ஏ.செந்தில்சுரேஷ், வட்ட கழக செயலாளர் எம்.ரூபன், மாவட்ட துணை அமைப்பாளர் தினகரன் சண்முகம், மாவட்ட பிரதிநிதி பி.சங்கர் மற்றும் கழக நிர்வாகிகள், அரசுத் துறை அதிகாரிகள், பொது மக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

## காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம்.பி. எழிலரசன் ஏற்பாட்டில்

# செந்தமிழ்ச்செல்வர் சி.வி.எம்.அண்ணாமலை அறக்கட்டளை சார்பில் காஞ்சிபுரத்தில் மாபெரும் வேலைவாய்ப்பு முகாம்!

## அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தொடங்கி வைக்கிறார்!

## அமைச்சர் ஆர்.காந்தி – க. சுந்தர் எம்.எல்.ஏ. – க. செல்வம் எம்.பி. பங்கேற்பு!

காஞ்சிபுரம், ஆக.23

செந்தமிழ்ச்செல்வர் சி.வி.எம். அண்ணாமலை அறக்கட்டளை சார்பில், காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினரும், செந்தமிழ்ச் செல்வர் சி.வி.எம். அண்ணாமலை அறக்கட்டளை மேலாண்மை இயக்குநருமான சி.வி.எம்.பி. எழிலரசன் ஏற்பாட்டில், இன்று (23.08.2025) காஞ்சிபுரம், எஸ்.எஸ்.கே.வி. மேல்நிலைப் பள்ளியில் மாபெரும் வேலைவாய்ப்பு முகாம்நடைபெறுகிறது. இந்த வேலைவாய்ப்பு முகாமானது காலை 09.00 மணிக்கு தொடங்கி மாலை 04.00 மணி வரையில் நடைபெறும்.

வேலைவாய்ப்பு முகாமினை, வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்கள் தொடங்கி வைக்க உள்ளார்.

அமைச்சர் ஆர்.காந்தி, காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் க. சுந்தர், எம்.எல்.ஏ., காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க. செல்வம், மாவட்டப் பொருளாளர் சன்பிரான்ட் கே. ஆறுமுகம், மாநகரச் செயலாளர் சி.கே.வி. தமிழ்ச் செல்வன், மாநகராட்சி மேயர் திருமதி மகாலட்சுமி யுவராஜ், காஞ்சிபுரம் வடக்கு ஒன்றியச் செயலாளர் பி.எம்.குமார், கழக செயற்குழு உறுப்பினர் எம்.எஸ்.சுகுமார்,

பகுதிக் கழக செயலாளர்கள் கே. திலகர், எஸ். சந்துரு, அ.தசரதன், சு.வெங்கடேசன், வாலாஜாபாத் வடக்கு ஒன்றியச் செயலாளர் பி.எம்.பாபு, பொதுக்குழு உறுப்பினர்கள் எஸ்.கே.பி. சீனிவாசன், எஸ்.சிகாமணி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் அ.யுவராஜ், காஞ்சிபுரம் ஒன்றியக்குழு பெருந்தலைவர் திருமதி மலர்கொடி குமார், வாலாஜாபாத் ஒன்றியக்குழு பெருந்தலைவர் ஆர்.கே. தேவேந்திரன், மாவட்ட ஊராட்சிகுழு துணைத் தலைவர் திருமதி நித்யா சுகுமார், உள்ளிட்ட மாவட்ட, மாநகர, பகுதி, ஒன்றிய, வட்டக் நிர்வாகிகள் மற்றும் கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள் அனைவரும் பங்கேற்க உள்ளனர்.

**அனைத்து பாலினத்தவரும் கலந்து கொள்ளலாம்!**

வேலைவாய்ப்பு முகாமில் 75 நிறுவனங்கள் பங்கேற்று, 10,000க்கும் மேற்பட்டோருக்கு வேலை வாய்ப்பினை வழங்கிட வாய்ப்புள்ளதாக தெரிவித்துள்ளனர்.10ம் வகுப்பு படித்தவர்கள் முதல் ஐ.டி.ஐ., டிப்ளமோ, Nursing, B.E.,/B.Tech., M.B.A., M.C.A.,B.A., B.Sc., B.Com., B.B.A., Any Degree (UG/PG) படித்தவர்கள் - (Pass/Arrears) உள்ளிட்ட அனைத்து வகையான பட்டப்படிப்பு படித்தவர்களுக்கு வேலைவாய்ப்பு உள்ளதாக நிறுவனங்கள் தெரிவித்துள்ளனர்.

காஞ்சிபுரம் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதியில் உள்ளவர்களும், வெளி மாவட்டங்களில் உள்ளவர்கள் கூட இந்த வேலைவாய்ப்பு முகாமில் கலந்து கொள்ளலாம். வேலைவாய்ப்பு முகாமில் கலந்துகொள்ள வருபவர்கள்,எத்தனை நிறுவனங்களில் பங்கேற்க விரும்புவதற்கு ஏற்ப சுயவிவரப் படிவம்,படிப்பு சான்றிதழ் நகல்கள், 2 பாஸ்போர்ட் சைஸ் புகைப்படம் உள்ளிட்ட ஆவணங்களை கொண்டு வர வேண்டும்.

அனைத்து பாலினத்தவரும் இந்த வேலைவாய்ப்பு முகாமில் பங்கேற்கலாம். மாற்றுத்திறனாளிகள் பங்கேற்க தனி கவனம் செலுத்தப்பட்டு முன்னேற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. முன்பதிவு செய்யத் தவறியவர்கள் முகாம் நடைபெறும் சமயம் நேரடியாக கலந்து கொள்ளலாம்.

முகாமில் பங்கேற்பவர்கள் முன்னதாகவே விளம்பரத்தில் உள்ள QR Code மூலம் ஸ்கேன் செய்து முன்பதிவு செய்திருந்தாலும், முகாம் நடைபெறும் வளாகத்தின் முகப்பில் உள்ள QR Code மூலம் ஸ்கேன் செய்து தங்கள் வருகையை பதிவு செய்ய வேண்டும். வருகையை பதிவு செய்பவர்களுக்கு இந்த முகாமிற்கான தனி அடையாள எண் (Unique ID No.) வழங்கப்படுகிறது. செல்போன் கொண்டு வராதவர்கள் அருகிலுள்ள உதவி மையத்தை அணுகி தங்களது வருகையை பதிவு செய்ய வேண்டும்.

**தாங்கள் விரும்பும் நிறுவனங்களை தேர்வு செய்யலாம்!**

நேர்காணல் வருபவர்கள், தங்களது செல்போனை பயன்படுத்தி செயலி (App) மூலமாக அவரவர் கல்வி தகுதிக்கேற்ப தாங்கள் விரும்பும் நிறுவனங்களை தேர்வு செய்யும் வசதியும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும், ஒவ்வொரு நிறுவனங்களின் விவரங்கள் மற்றும் அறை எண் விவரம் பேனராக வைக்கப்பட்டுள்ளது.

வேலைவாய்ப்பு முகாமிற்குவருகை தருபவர்களுக்கு தேவையான வழிகாட்டுதலையும், உதவி செய்யவும்ஏதுவாக தி.மு.க. இளைஞர் அணி, மாணவர் அணி தகவல் தொழில்நுட்ப அணி சார்ந்தவர்களும், Young India அமைப்பின் சார்பாக இளைஞர்களும், பச்சையப்பன் ஆடவர்/மகளிர் கல்லூரி, ஸ்ரீ சங்கரா கல்லூரி, எஸ்.எஸ்.கே.பி. மகளிர் கல்லூரி, காஞ்சி ஸ்ரீ கிருஷ்ணா கல்லூரி, திருமலை பொறியியல் கல்லூரி மாணவர்கள் தன்னார்வலர்களாக பங்கேற்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வேலைவாய்ப்பு முகாமில் நேர்காணலில் பங்கேற்க வரும் ஒரு நபர், ஒன்றுக்கும் மேற்பட்ட நிறுவனங்களின் நேர்காணலில் பங்கேற்க வழிகாட்டுதல் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**மதிய உணவு – தேநீர் வழங்கப்படும்!**

நேர்காணலில் பங்கேற்பவர்களுக்கு குடிநீர், தேநீர், ஸ்நாக்ஸ், ஆயிரக்கணக்கான இளைஞர்களுக்கு மதிய உணவு வழங்க நிகழ்ச்சி ஏற்பாட்டாளர் சி.வி.எம்.பி. எழிலரசன், எம்.எல்.ஏ., ஏற்பாடு செய்துள்ளார்.

வேலைவாய்ப்பு முகாம் சிறப்புடன் நடைபெற Skilled Jobs நிறுவனர் ராகவன் ராமு அவர்களும்,செந்தமிழ்ச்செல்வர் சி.வி.எம். அண்ணாமலை அறக்கட்டளை சார்பில் சி.வி.எம்.பி.பார்வேந்தன், முனைவர் க.செல்வம், எ.க. ஆதித்தியன், எ.க. அகத்தியன், எஸ்.எழில்குமார் உள்ளிட்டோர் அமைப்பாளர்களாக இருந்து நிகழ்ச்சியை ஏற்பாடு செய்துள்ளனர்.

இவ்வாறு, காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம்.பி. எழிலரசன், எம்.எல்.ஏ., தெரிவித்துள்ளார்.



திருவாலங்காடு மேற்கு ஒன்றியத்திற்குட்பட்ட ஊராட்சிகளில் வசிக்கும் பொது மக்களின் புகாரின் அடிப்படையில் சீரான மின்விநியோகம் வழங்கிட உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என திருவள்ளூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் வி.ஜி. இராஜேந்திரன் அவர்கள் மின் பகிர்மான கழக திருத்தணி உதவி கோட்ட பொறியாளர் முருகபூபதி, உதவி பொறியாளர் கேசவன் ஆகியோரிடத்தில் ஆலோசனை செய்த போது.



உங்களுடன் ஸ்டாலின் என்ற முன்னெடுப்பின் கீழ் திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் எல்லாபுரம் ஒன்றியம் பாலவாக்கம் ஊராட்சியில் நடைபெற்ற திட்ட முகாமில் மாவட்ட பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ்ராஜ் கலந்து கொண்டு மக்களுக்கான தேவைகளை மனுக்களாகப் பதிவு செய்து உடனடியாக விண்ணப்பித்தவர்களுக்கு சான்றிதழ்கள் அரசு சார்பில் வழங்கப்பட்ட நலத்திட்ட உதவிகள் கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகம் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் தலைமை செயற்குழு உறுப்பினர் எல்லாபுரம் ஜெ.மூர்த்தி, நிர்வாகிகள் மு.பகலவன், சி.எச்.சேகர் , வெ.அன்பு வாணன், கே.வி.ஜி.உமாமகேஸ்வரி, ஏ.வி.ராமமூர்த்தி, ஜான் பொன்னுசாமி, அபிராமி குமரவேல், வே.ஆனந்த் குமார், என்.கிருஷ்ணமூர்த்தி, தனசேகரன், க.சம்பத், வி.பி.ரவிக்குமார், டி.சங்கர், சுமன், அப்புன், முனுசாமி, வழக்கறிஞர் சீனிவாசன், ஐ.ராஜா, உள்படஅனைத்து அரசு துறை அதிகாரிகள் கழக நிர்வாகிகள் உள்ளனர்